# தொழிற்கல்வி என்றால் என்ன? 3 கற்கும் இடங்கள்




Ecole professionelle: துறைசார் தொழிற்கல்விப் பாடசாலை Formation scolaire: பாடசாலைக் கற்றைநெறி
Entreprise formatrice: தொழிற்கல்வி நிறுவனம் Formation à la pratique professionnelle: நிறுவனக் கற்கைநெறி
Centres de cours interentreprises: தொழிலகத்திற்கு வெளியிலான பாடநிலையம்
Techniques fondamentales: அடிப்படைத் தகுதி

தொழிலுக்கான அடிப்படைக்கல்வி (தொழில் கற்கைநெறி அல்லது தொழிற்கல்வி எனவும் அழைக்கப்படும்) சுவிசில் இளையோர்கள் அதிகளவில் பெறும் கற்கைநெறியாகும். இது கற்கும் பாடங்களாகவும் செய்முறைப் பாடங்களாகவும் சேர்ந்து இருப்பதுடன் முடிவில் சுவிஸ் நாடு தழுவிய அங்கீகாரம் உடைய தேர்ச்சிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், இது பெறுமதி வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றது. இந்தத் தேர்ச்சிப்பத்திரங்களின் பெயர்கள்

- 2-வருட தொழிற்கல்வியின் பின்: அரச மத்திய தொழில்பயிற்சி சான்றிதழ்
- 3-அல்லது 4-வருட தொழிற்கல்வியின் பின்: அரச தொழில் கல்வி தகமைச் சான்றிதழ்

உதாரணமாக நீங்கள் ஒரு தொழிற்கல்வியை மேற்கொண்டால், நீங்கள் 3 கற்கும்-இடங்களில் கற்பீர்கள்:

## 1. தொழில் கற்கும் நிறுவனம் (வர்த்தக நிறுவனம், விற்பனை நிறுவனம், கட்டிட நிறுவனம், உணவுச்சாலை, வாகனம் திருத்துமிடம் மற்றும் வேறு பலவும்)

கற்கும் நிறுவனங்களில் நீங்கள் வழமையான நாளாந்த செயற்பாடுகளில் தொழில் புரிவதோடு ஆரம்பத்தில் இலகுவானவைகளிலும், தொழிற்கல்வியின் தொடர்ச்சியாக மேலும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுவீர்கள். அதேவேளை நீங்கள் செயல்முறை ரீதியாக, குறிப்பிட்ட தொழில்களுக்குத் தேவையான கைவேலைகளையும் பழகிக் கொள்வீர்கள் (கைத்தொழில் பழகல், தொழில் கருவிகள் இயந்திரங்கள் பாவித்தல், வாடிக்கையாளர் சேவை போன்றவை) அத்துடன் இதன்போது உங்கள் தொழிற் பயிற்சியாளரால் அல்லது வேறு பராமரிப்பு நபர்களால் (சக தொழிலாளர்கள், மேல் வருடக் கற்கையாளர்கள்) விசேட பராமரிப்பும் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்வீர்கள்.

தொழிலகத்தில் நீங்கள் வாரத்தில் 3-4 நாட்கள் பயிற்சி பெறுவீர்கள், அதாவது உதாரணமாக திங்கள் தொடக்கம் புதன் வரை மற்றும் வெள்ளிக் கிழமைகளில். அங்கு நீங்கள் - ஆரம்பம் தொடக்கம் தொழிற்கல்வி தொடரும் காலத்தில் மேலும் அதிகளவில் தொழிற்சாலை உற்பத்திகளில் செயற்படுவீர்கள், அதேவேளை கற்பவர்களுக்கான ஒரு ஊதியத்தையும் பெற்றுக்கொள்வீர்கள். இது -ஒவ்வொரு தொழிலை மற்றும் கற்கும் வருடங்களைப் பொறுத்து வேறுபட்டிருக்கும். மாதாந்தம் 400 பிராங்ற்கும் 1600 பிராங்கிற்கும் இடைப்பட்டதாக இது இருக்கும். உங்களுக்கு வருடத்தில் 5 கிழமை விடுமுறை எடுப்பதற்கு உரிமை உள்ளது.

## 2. தொழிலகத்திற்கு வெளியிலான பாடநிலையம்

ஒரே விதமான உற்பத்திகளை மேற்கொள்ளும் பல நிறுவனங்கள் மற்றும் ஒரேவிதமான சேவையை வழங்குபவைகள், ஒரேவிதமான தொழில்நுட்பத்தையும் வேலை முன்னெடுப்பையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு தொழிலுக்கும் அடிப்படை ரீதியான செயற்பாட்டுத் தகுதிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறான தகுதிகளை நீங்கள் தொழிலகத்திற்கு வெளியால், மற்றும் தொழிலக வெளியிலான பாடநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த வகுப்பிற்கு நீங்கள் ஒருவருடத்தில் தனித்தனி நாட்களிலோ அல்லது பல நாட்களுக்கோ பிராந்தியத்திலுள்ள பாடநிலையத்திற்குச் செல்லலாம், கல்வியில் பங்கேற்பது உங்களுக்கு இலவசமாகும்.

## 3. துறைசார் தொழிற்கல்விப் பாடசாலை

துறைசார் தொழிற்கல்விப் பாடசாலையில் நீங்கள் வாரத்தில் 1-2 நாட்கள் (8 தொடக்கம் 15 மணித்தியாலங்கள்) உங்கள் தொழிலுக்கு ஏற்ற பாடங்களைக் கற்றுக்கொள்வீர்கள் அத்துடன் உங்கள் அடிப்படைத் தொழில் அறிவை மேம்படுத்துவதுடன் முக்கிய பாடங்களான மொழி மற்றும் பொதுஅறிவு (அரசியல், சட்டம், குடியியல், கலாச்சாரம், தொழில்நுட்பம், பொருளாதாரம், பணம் மற்றும் நுகர்வு, தொடர்புகள் மற்றும் சேர்ந்து வாழுதல், காப்புறுதிகள் மற்றும் ஏனையவை). இப் பாடங்கள் உங்கள் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நடைபெறுவதுடன் இது இலவசமானது (கற்பதற்கான உபகரணங்கள், போக்குவரத்து மற்றும் ஏனையவைகளுக்கு வசதியுண்டு).

இவ்வாறான துறைசார் வகுப்புகளில் பங்கேற்பதற்கு நீங்கள் அதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பாடசாலை அறைகளுக்குச் செல்லவேண்டும் (செய்முறை வகுப்பறை, ஆய்வு அறை, கணணி அறை மற்றும் ஏனையவை). இந்த செய்முறைக்கு மிகவும் உகந்த பாடங்களில் நீங்கள் தொழில் துறைக்கு ஏற்ற விதத்தில் தொழில்கல்விப் பகுதியைக் கற்றுக்கொள்வீர்கள். துறைசார் தொழிற்கல்வி வகுப்புகளில் நீங்கள் வீட்டுப் பாடங்களைப் பெற்றுக்கொள்வீர்கள் அவற்றை உங்கள் ஓய்வுநேரத்தில் செய்து கொள்ள வேண்டும். இதிலிருந்து நீங்கள் பரீட்சைக்கு உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வீர்கள், இவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படும்: இந்தப் புள்ளிகள் உங்களது இறுதிப் பரீட்சையில் கவனத்தில் எடுக்கப்படும்.

எவராவது துறைசார் தொழிற்கல்வி வகுப்புகளில் முழுவதுமாகப் பங்கேற்க முடியாவிட்டால் மற்றும் பரீட்சையில் போதுமான புள்ளிகளைப் பெறாவிட்டால், உதவி வகுப்புகளில் பங்கேற்றுக் கொள்ளலாம்.